# தமிழ்நாட்டின் தலைவிதி ராவ் நாடு திரும்பியதும் நிர்ணயிக்கப்படும்?

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 12 இதழ் 99
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 25 — 05 — 1993

(லண்டன்)
வெளிநாட்டுக்கு தற்போது விஜயம் செய்திருக்கும் இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் நாடு திரும்பியதும் தமிழ் நாட்டின் தலைவிதி நிர்ணயிக்கப்படும் என பி. பி. ஸி அதன் கண்ணோட்டத்தில் நேற்றுத் தெரிவித்தது. இதேவேளையில் தமிழ்நாடு அரசைக் கலைப்பது சம்பந்த (4-ம் பக்கம் பார்க்க)

## கிளாலி கடற்பகுதியில் புலிகள் - கடற்படை கடும் மோதல்

(எழுதுமட்டுவாள்)
நேற்று மாலை 6-45 மணியிலிருந்து கிளாலிப் பகுதியில் கடற்படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் கடும் மோதல் ஏற்பட்டது. கிளாலி கடற்பரப்பிலிருந்து கடற்படையினர் கிளாலிக் கரையை நோக்கி 50 கலிபர் தாக்குதல்களையும் பீரங்கித் தாக்குதல்களையும் மேற் (4-ம் பக்கம் பார்க்க

# தமிழகத்திலுள்ள இல. தமிழ் அகதிகள் அனைவரும் உடன் திருப்பி அனுப்பப்படுவர்

## ஜெயலலிதா அறிவிப்பு

(சென்னை)
தமிழ்நாட்டிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் அனைவரும் மிக விரைவில் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவார்கள். இவ்வாறு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேற்று அறிவித்தார்.

சென்னையில் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டு உரையாற்றுகையில் அவர் இந்த அறிவித்தலை விடுத்தார்.

அவர் தனது அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில் தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கை தமிழ் அகதிகளை திருப்பியனுப்புவதில் கடந்த இருவருடங்களாக மத்திய அரசு மந்தமான போக்கையே கடைப்பிடித்து வருகின்றது.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து முகாம்களிலும் மற்றும் வெளியிடங்களிலுமுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் அனைவரையும் மிகவிரைவில் இலங்கைக்கு திருப்பி அனுப்புவதே எனது நோக்கம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (வி - க-இ)

## தமிழர்பிரச்னை தீர எனது முழு ஒத்துழைப்பை வழங்குவேன்

— இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் உறுதி

(தாளையடி)
“சொல்லொணா இன்னல்களுக்கு மத்தியில் வாழும் இப்பகுதி மக்களின் பிரச்னைகளை நான் நன்கு அறிவேன். இப்பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு நீங்கள் எமக்கு உதவினால் தென் இலங்கை மக்களின் பிரதிநிதியாக நான் செயல்பட்டு இப்பிரச்னைகள் தீர என்னாலான முழு உதவி ஒத்துழைப்பையும் வழங்குவேன்”

இவ்வாறு நேற்று இலங் 4-ம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சிகள் இணைந்து முதலமைச்சர் நியமனங்களை எதிர்த்து வழக்குத் தாக்கல்!

(கொழும்பு)
தென். மாகாணத்திலும், வடமேல் மாகாணத்திலும் ஐக்கிய தேசிய கட்சியை சேர்ந்தவர்கள் முதலமைச்சராக நியமிக்கப்பட்டதை எதிர்த்து பொது ஜன ஐக்கிய முன்னணியும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் கூட்டாக வழக்குத்தாக்கல் செய்துள்ளன. (4-ம் பக்கம் பார்க்க)

## சங்குப்பிட்டி-பூநகரி பாதைக்கு முத்தரப்பு உடன்பாடு தேவை

### யு. என். எச். சி. ஆர். ஆலோசனை

(கொழும்பு)
சங்குப்பிட்டி - பூநகரி பாதை குறித்து முத்தரப்பு உடன்பாடு மேற்கொள்ளப்படவேண்டுமென 'யு. என். எச். சி. ஆர்.' அரசிடம் ஆலோசனை தெரிவித்துள்ளது. இப்பாதையூடாக பொது மக்கள் பாதுகாப்பாக பயணம் செய்வதை உறுதிப்படுத்தும் வகையில் விடுதலைப்புலிகள் - அரசு - யு. என். எச் சி ஆருக்கிடையில் முத்தரப்பு (4-ம் பக்கம் பார்க்க)

## அராலித்துறை குண்டுவெடிப்பு: ஆணைக்குழு பகிரங்க விசாரணை நடத்தும்

(கொழும்பு)
அராலித்துறையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தில் மேஜர் ஜெனரல் கொட்டேகொடுவ உட்பட 10 ராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து சர்வதேச ஆணைக்குழு பகிரங்கமாகவே விசாரிக்கவுள்ளதாம். (4-ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியுடன் சந்திப்பு

(கொழும்பு)
கடந்த ஆண்டு ஆகஸ்ட் 8ம் திகதி இடம்பெற்ற அராலி குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாக விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் (4-ம் பக்கம் பார்க்க)

## மூதூர் படகு விபத்து அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)
மூதூர் படகு விபத்து குறித்து விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்கவென நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு அதன் அறிக்கையை நேற்று முன்தினம் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவிடம் கையளித்தது. (4-ம் பக்கம் பார்க்க)

## குடித்தபடியே படகோட்டி படகைச் செலுத்தினர்

(கொழும்பு)
மூதூர்படகு விபத்து நடைபெற்ற போது சம்பந்தப்பட்ட படகோட்டி குடித்துக் கொண்டே படகை, செலுத்தியதாக இந்த விபத்தை விசாரணை செய்த முன்னாள் நீதிபதி இல்லா தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இந்த விபத்தில் 50க்கு மேற்பட்டோர் பலியானது குறிப்பிடத்தக்கது. (இ)

## மாத்தறை மாவட்ட வாக்குகளை மீண்டும் எண்ணுமாறு கோரிக்கை

(கொழும்பு)
இலங்கையில் இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தலில் மாத்தறை மாவட்டத்தில் பதிவுப்பட்ட வாக்குகளை மீண்டும் எண்ணுமாறு உத்தரவிட வேண்டுமெனக் கோரி எதிர்க்கட்சிகள் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முடிவு செய்துள்ளன.

மாத்தறையில் வாக்குகள் எண்ணும் பிரதான நிலையமாகச் செயல்பட்ட ராகுல வித்தியாலயத்திலுள்ள கழிவறை ஒன்றிலிருந்தும் அதன் சுற்றுப்பகுதியிலிருந்தும் வாக்களிக்கப்பட்ட பல வாக்குச் சீட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே மாத்தறை மாவட்ட வாக்குகளை மீண்டும் எண்ணுவதற்கு நீதிமன்ற உத்தரவை எதிர்க்கட்சிகள் கோரவுள்ளன. (இ)

## கிளாலி பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)
கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று 25ம் திகதி செவ்வாய்க்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## வரிவிளம்பரம்

### முன்னோடி நூல்கள்

அராலியூர் ந. சுந்தரம் பிள்ளை எழுதிய 'செட்டிக் காரர்கள்' முதலாம்பிள்ளை 30/- நூல்கள் முறையே இலங்கை வானொலி தமிழ்ச் சேவைத் தனி நாடகங்களின் முதலாம் இரண்டாம் தொகுதிகளாகும். (சி-142)

### கணபதி ஹோமம்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயத்தில் நேற்று திங்கள் காலை மஹா கணபதி ஹோமம் ஆரம்பமானது.

### மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் பறுவதபத்தினி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை 26ந் திகதி புதன்கிழமை கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகின்றது.

அடுத்த மாதம் 3ம் திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

## இராசி பலன்

25-05-1993

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு வைகாசி 12)

சதுர்த்தி மாலை 5-36 வரை! புனர்பூசம் பி. இ. 2-01 வரை, சித்தயோகம் இராகுகாலம் பகல் 2-52 முதல் 4-22 வரை சுபநேரம் காலை 10-22 முதல் 11-52 வரை வரை சதுர்த்தி விரதம்.

மேடம்: நம்பி ஏமாறுதல், பணவிரயம், அமைதிக்குறைவு

இடபம்; தாய்வழி அனுகூலம், காரியசித்தி, நற்செய்தி

மிதுனம்: வீணான குளப்பம், வாக்குவன்மை, தொழில் லாபம்.

கடகம்: இன்பகரமான நிலை, பணவரவு, புதிய முயற்சி.

சிம்மம்: அதிகாரிகள் இனம், சோம்பல், அவமதிப்பு.

கன்னி: பெண் சகாயம், அதிக பணவரவு, குடும்பசுகம்

துலாம்: காரியசாதனை நல்லமதிப்பு, இனசனவருகை

விருச்சிகம்: தாயார் கவலை, மனதளர்ச்சி, அலைச்சல்

தனுசு: தொழில் பகை, வாக்குவாதம், சிறுவிபத்து.

மகரம்: சமூக அந்தஸ்து, நற்பெயர், அதிக வருவாய்.

கும்பம், மனத்தெளிவு, உறவினர் அனுகூலம், தீர்ம சிந்தனை

மீனம்! இஷ்டபுத்திர யாத வேதனை, பணமுடை, உடல் நலக்குறைவு!

— ஜோதிடர்

## யாழ்ப்பாணத்தில் பதிவாளர்நாயகம் அலுவலகம்

(கொழும்பு)

வடபிராந்திய பதிவாளர் நாயகம் அலுவலகம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் திறப்பதற்கு அனுமதி கிடைத்துள்ளது. விரைவில் அலுவலகம் யாழ்ப்பாணத்தில் திறக்கப்படும்.

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பதிவு வேலைகள் யாழ்ப்பாணத்தில் அமையும் என்று தெரிவிக்கப்படுகிறது. (பி)

## இன்று

(கொழும்புத்துறை)

அரியாலை நீர்ப்பொச்சித் தாழ்வு அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானத்தின் சஹஸ்ர மகா சங்காபிஷேகம் இன்று 25-ந் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 11 மணிக்கு நடைபெறும். (154)

° ° °

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி ஸ்ரீமகா கணபதிப் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று 25-ம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பதினொரு தினங்கள் உற்சவம் நடைபெற்று அடுத்த மாதம் 3-ம் திகதி வியாழக்கிழமை தேர் உற்சவமும், 4-ம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்த உற்சவமும் இடம்பெறும். (க-கி)

0 0 0

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மயிலணி திருக்குடவாயில் ஸ்ரீ விஸ்வநாதசுவாமி கோவில் மஹோற்சவம் 10 தினங்கள் நடைபெற உள்ளன.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 8-30 மணிக்கு துவஜாரோகணமும், யூன் மாதம் 1-ந் திகதி மாலை 5 மணிக்கு சப்பறத்திருவிழாவும், யூன் 2-ந் திகதி புதன்கிழமை தேர்த் திருவிழாவும், 3-ந் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன.

தினமும் மாலை 5 மணிக்கு 'பெரியபுராணம்' என்னும் பொருளில் திரு குமாரசுவாமி சொற்பொழிவாற்றுகிறார். (சு)

# உலர் உணவு பெற 10 மைல் பயணம்

(தாளையடி)

கட்டைக்காடு - வெற்றிலைக்கேணி இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து பூனைத்தொடுவாய் சுண்டிக்குளம் கடற்கரையோரத்தில் தற்காலிக குடிசைகளில் வசிக்கும் சுமார் முன்னூறுவரையிலான குடும்பங்கள், இடம்பெயர்ந்தோருக்கான இலவச உணவுப்பொருட்களைப் பெறுவதில் பல்வேறு கஷ்டங்களை அனுபவிக்கின்றன.

இரண்டு கிழமைக்கு ஒரு தடவை சுமார் பத்து மைல் தூரத்திலுள்ள கண்டாவளை, பிரமந்தனாறு விஸ்வமடு தருமபுரம் பகுதிகளிலுள்ள கூட்டுறவுச் சங்கக்கிளைகளுக்கு சேறும் சகதியும் உள்ள ஆனையிறவு கடல்நீர் ஏரியைக் கடந்து கால்நடையாக பத்துமைல் தூரம் சென்று தமக்குரிய உலர் உணவுப்பொருட்களை பெற்று திரும்புகின்றனர். -163

# வீட்டினுள் புகுந்து நகைகள் கொள்ளை

(நெல்லியடி)

வீட்டுக் கூரையைப் பிரித்து உட்சென்ற திருடர் கோஷ்டி அங்கிருந்து சுமார் 2 லட்சம் பெறுமதியான தங்க நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு துன்னாலை மத்தியில் இடம்பெற்றுள்ளது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது!

வீட்டுச் சொந்தக்காரர் வழமைபோல் நித்திரைக்காக இரவில் வேறொரு வீட்டுக்குச் சென்ற நேரம் பார்த்து அங்குபுகுந்த திருடர் கோஷ்டி சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான தாலிக்கொடி, சங்கிலி, பிள்ளைகளின் கைச்சங்கிலி போன்றவற்றை கொள்ளையடித்துள்ளது

இதுபற்றி வீட்டின் உரிமையாளரான பேரா நாகராசா சர்மா பருத்தித்துறை காவல் பணிமனையில் முறையிட்டுள்ளார். -160-சி

## வேண்டுகோள்

(திருநெல்வேலி)

பாடசாலைகளில் உள்ள மேலதிக ஆசிரியர் விபரங்களையும், இதுவரை பிறமாவட்டங்களில் கடமை புரியாது ஒரே இடத்தில் தொடர்ந்து சேவையாற்றும் ஆசிரியர்களது விபரங்களையும்சேகரித்து அனுப்புமாறு கல்விப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (157)

## சம்பளம் வழங்கப்படவில்லை

(மானிப்பாய்)

யாழ் மாவட்ட கடற்றொழில் விரிவாக்க நிலையத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு கடந்த ஜனவரி மாதத்தின் பின்னர் இதுவரை சம்பளம் வழங்கப்படவில்லையென்று தெரிவிக்கப்படுகிறது. (71)

## வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில்தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோவில் கொடியேற்ற வைபவம் நாளை 26ம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

யூன் மாதம் 2ம் திகதி புதன் கிழமை சப்பறத்திருவிழாவும் 3ம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், 4ம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறுகின்றது (சு)

## எழுதுவினைஞர் பதவி உயர்வு

(கொழும்பு)

சுருக்கெழுத்தாளர்கள், தட்டெழுத்தாளர்கள் மற்றும் எழுதுவினைஞர்களாக சுமார் 15 வருடங்களாக கடமையாற்றியோர் தரம் I இற்கு பதவி உயர்த்தப்படுவர் என அரசு அறிவித்துள்ளது.

இவ் அறிவிப்பினால் 22 ஆயிரம் எழுதுவினைஞர்கள் மற்றும் ஆயிரம் தட்டெழுத்தாளர்கள் பயனடையவுள்ளனர் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ)


## Post of Project Officer

**(Education and Management)**

Applications are invited for the above post from energetic graduates under the age of 40 years. Applicants should have an aptitude to travel and able to converse in English. Preference will be given to married personel. Applications should be sent under registered post marked on the left hand corner of the envelope - "Post of Project Officer" - addressed to: The Hony. Secretary, Shri Lanka Red Cross Society, Jaffna Branch, 73, Kandy Road, Jaffna to reach on or before 15th June, 1993. Applications can be handed over at office to the Administrative Officer and acknowledgement obtained from him.

**Hony Secretary.**

Shri Lanka Red Cross Society,
Jaffna Branch,
73, Kandy Road, Jaffna. (A 3156)

## கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்

## வைகாசி மஹோற்சவ பெருவிழா - 1993



0-0-0-0-0-0-0-0-0-0-0-0-0

26-05-93 தொடக்கம் 6-6-93 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 1993-05-26 | புதன் | காலை | 10 மணி | கொடியேற்றத்திருவிழா |
| 1993-05-31 | திங்கள் | மாலை | 5 மணி | வசந்த உற்சவ திருவிழா |
| 1993-06-02 | புதன் | பிற்பகல் | 2 மணி | வேட்டைத்திருவிழா |
| 1993-06-02 | புதன் | மாலை | 6 மணி | சப்பறத்திருவிழா |
| 1993-06-03 | வியாழன் | காலை | 10 மணி | தேர்த்திருவிழா |
| 1993-06-04 | வெள்ளி | காலை | 10 மணி | பூரணை தீர்த்தத் திருவிழா |
| 1993-06-05 | சனி | பகல் | 12 மணி | மகேஸ்வரபூசை அன்னதானம் |
| 1993-06-05 | சனி | இரவு | 6 மணி | பூங்காவனத் திருவிழா |
| 1993-06-06 | ஞாயிறு | காலை | 6 மணி | பிராயச்சித்த அபிஷேகம் |
| 1993-06-06 | ஞாயிறு | இரவு | 7 மணி | வயிரவர் பொங்கல் விழா |

மஹோற்சவ காலங்களில் இரவு 7-30 மணி தொடக்கம் 8.30 மணிவரை சமய சொற்பொழிவு நிகழ்த்துபவர் "சிவநெறி தொண்டன்" "அறநெறிக் காவலர்" செ. சத்தியமூர்த்தி ஆசிரியர் அவர்கள்.

இங்ஙனம்

திருக்கோயில் பரிபாலன சபை

தில்லையம்பதி
25-05-1993. (சி 129

## இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம்

## வருடாந்த உற்சவம்

மேற்படி ஆலய வருடாந்த உற்சவம் மே மாதம் 25ம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகிறது. 10 தினங்கள் நடைபெற்று, திருவூஞ்சல் உற்சவத்துடன் யூன் மாதம் 3ம் திகதி உற்சவம் நிறைவுபெறும்.

திருவிழாக் காலங்களில் அருள்மொழிச் செல்வர் வாகீசகலாநிதி யாழ்.பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் க. நாகேஸ்வரன் எம். ஏ. அவர்கள் தினமும் இரவு 7-15 மணி முதல் 8-15 மணி வரை "திருவிளையாடற் புராணம்" என்ற தலைப்பில் சமயச் சொற்பொழிவு நிகழ்த்துகிறார்.

அனைவரும் வருகை தந்து அம்பாளின் அருள் பெற்றுச் செல்லுமாறு வேண்டுகிறோம்.

**உற்சவ உபயகாரர்கள்.**

துவாரளி வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி. (சி-145)

... மன்றம்
யாழ்ப்பாணம்



# தமிழக ஆளுநரின் ராஜினாமாவிற்கு பல கட்சிகளும் பெரும் வரவேற்பு

(சென்னை)

தமிழக ஆளுநர் பீஷ்மன் நாராயண் சிங் தமது பதவியை ராஜினாமா செய்தது குறித்து தமிழக கட்சிகள் பல வரவேற்பு தெரிவித்துள்ளன.

இதுபற்றி தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி கூறுகையில்: அவரது ராஜினாமா துரதிர்ஷ்டவசமானது என்றாலும் புதிய ஆளுநராக டாக்டர் சென்னாரெட்டி நியமிக்கப்பட்டிருப்பது வரவேற்கத் தக்கது என்றார்.

காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. திண்டிவனம் இராமமூர்த்தி ஆளுநரின் ராஜினாமாவை வரவேற்று கூறுகையில், மாநில நிர்வாகத்தின் மீது ஆளுநருக்கு இருக்க வேண்டிய கட்டுப்பாடு அவருக்கு இல்லாமல் போய்விட்டது என்றும் விடுதலைப் புலிகள் காவலில் இருந்து தப்பிச் சென்ற நிகழ்ச்சியில் அவர் அலட்சியம் காட்டினார் என்றும் கூறினார்.

தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி, ஆளுநர் பீஷ்மன் நாராயண் சிங்கின் ராஜினாமா குறித்து தாம் மகிழ்ச்சியடைவதாக தெரிவித்துள்ளார்.

தமிழக முன்னாள் அமைச்சரும் தமிழக நல்லாட்சி இயக்க தலைவர்களில் ஒருவருமான திரு க ராஜாராம் ஆளுநரின் ராஜினாமாவை வரவேற்றுள்ளார். ஆளுநரை மாற்றவேண்டும் என்று நல்லாட்சி இயக்கம் பலமுறை கேட்டுக் கொண்டதென்றும் அவர் கூறினார்.

நீண்டகால அரசியல் அனுபவம் பெற்று மத்திய அமைச்சராகவும் ஆந்திர மாநில முதல்வராகவும் பல மாநிலங்களில் ஆளுநராகவும் இருந்து வந்த டாக்டர் சென்னாரெட்டி தமிழகத்தின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டிருப்பதை தாம் வரவேற்பதாகவும் இதன் மூலம் தமிழகத்தில் பாரபட்சமற்ற ஆட்சி நடைபெற ஏதுவாகுமென்று தாம் நம்புவதாகவும் திரு ராஜாராம் கூறினார்.

## புதிய ஆளுநர்

தமிழகத்தின் புதிய ஆளுநர் டாக்டர் சென்னாரெட்டி ஆந்திரத்தின் முன்னாள் முதல்வராவார். மத்திய அமைச்சராகவும் பணியாற்றியவர். நிர்வாகத்தில் கண்டிப்பானவரென்றும் விரைவாக செயற்படுவாரெனவும் பெயர் பெற்றவர்.

டாக்டர் சென்னாரெட்டி தமது பதவியை உடனடியாக பொறுப்பேற்கிறார். (சி)

# அ. தி. மு. க. 'மெரினா' கூட்டத்தில் வன்முறை, தீவைப்பு, கல்வீச்சு

(சென்னை)

சென்னையில் மெரினா கடற்கரையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற அ. தி. மு. க. கூட்டத்தில் இடம்பெற்ற கொந்தளிப்பு நிலையை அடுத்து தீவைப்பு, கல்வீச்சுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்த அமளி துமளியில் அரச பேருந்துகளும், கார்களும் தீயிடப்பட்டதாகவும் இச்சம்பவத்தில் பலர் காயமடைந்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை தமிழக ஆளுநர் பீஷ்மன் நாராயண் சிங்கின் ராஜினாமாவை அடுத்து தமிழகத்தில் அரசியல் கொந்தளிப்பு நிலை உருவாகியுள்ளது. (கி)

## புலிகள் விவகாரம்

# தி. மு. க. போக்கையே அ. தி. மு. க. கடைப்பிடிக்கிறது

(சென்னை)

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை முன்னாள் தி. மு. க. அரசு எந்தப் போக்கை மேற்கொண்டிருந்ததோ அதே போக்கைத் தான் தற்போதைய அ. தி. மு. க. அரசும் மேற்கொண்டு வருவதாக மூத்த காங்கிரஸ் தலைவர் ஜி. கே. மூப்பனார் கூறியுள்ளார்.

கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழகத்தில் காங்கிரஸ் அல்லாத அரசுகளின் செயல்களுக்கு மத்திய அரசின்மீது பழி போடப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இவ்வாறானதொரு கருத்தை தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தியும் தெரிவித்துள்ளார். (கி)

## ஷெல் தாக்கு

(அரியாலை)

மண்டைதீவு இராணுவ முகாமிலிருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணியிலிருந்து மூன்று ஷெல்கள் கரையோரப் பகுதியை நோக்கி ஏவப்பட்டன. அவையாவும் கரையோரங்களில் வந்து வீழ்ந்து வெடித்தன. இரவில் சூள் லாம்பில் மீன் பிடித்துக்கொண்டிருந்த மீனவர்கள் மீன் பிடிக்காது வீடு திரும்பினர். (59)

# இலங்கை சனத் தொகை இரு மடங்காகும்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் சனத்தொகை 2040ம் ஆண்டளவில் தற்போதுள்ள சனத் தொகையிலும் பார்க்க இரண்டு மடங்காக அதிகரிக்கும் என்று சனத் தொகை தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

வருடம் ஒன்றுக்கு 2 லட்சம் பேரினால் அதிகரித்துவரும் சனத் தொகை வளர்ச்சியினால் இயற்கைச் சுற்றுடலுக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றது என்றும், சனத் தொகை அதிகரிப்பினால் 1962ம் ஆண்டு 84 வீதமாக இருந்த வனப் பிரதேசம் 1992ம் ஆண்டு 25 வீதமாகக் குறைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-வி)

# ஒரு பாடசாலையில் ஆறு அதிபர்கள்

(வட்டுக்கோட்டை)

காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் ஆறு நிரந்தர அதிபர்கள் தற்போது கடமையாற்றி வருகின்றனர். தற்போது இப்பாடசாலை யாழ் சன்மார்க்க வித்தியாலயத்தில் இயங்கி வருகின்றது.

இந்த வித்தியாலயத்தில் சுமார் அறுநூறு பிள்ளைகள் கல்வி கற்பதாகவும் இவர்கள் காரைநகரில் இருந்து இடம் பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கிறார்கள் என்றும் முதலாம் தர நிரந்தர அதிபர் ஒருவருடன் இயங்கும் இப்பாடசாலையில் 2ம், 3ம் தர நிரந்தர அதிபர்கள் ஐவர் கடமையாற்றுவதாகவும் இவர்கள் அனைவரும் புதிதாகப் பதவி உயர்வு பெற்றவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (139-சி)

# தென்னந் தும்புப் பொதிக்குள் 600 கிலோ போதை வஸ்து

(கொழும்பு)

இலங்கைக்கும்-பிரிட்டனுக்கும் இடையில் இடம்பெற்ற போதைவஸ்துக் கடத்தலை பிரிட்டிஷ் போதைப்பொருள் தடுப்புப் பணியகம் லண்டனில் கண்டுபிடித்துள்ளது

தென்னந்தும்புப் பொதிக்குள் கடத்தப்பட்ட இந்த 600 கிலோ போதைப்பொருள் 8 கோடி 20 லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்தது.

இதுசம்பந்தமாக பிரிட்டிஷ், இலங்கையைச் சேர்ந்த ஏழு பேரை பொலிசார் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (க-வி)

# ஆடம்பர மாளிகையிலிருந்து 17 குழந்தைகள் மீட்பு

(கொழும்பு)

ஒரு ஆடம்பர மாளிகையிலிருந்து பலி வாட்டத்துடன் 17 குழந்தைகள் மீட்கப்பட்டுள்ளன.

குருநாகல் நகர மத்தியிலுள்ள ஆடம்பரமான இருமாடி மாளிகை ஒன்றிலிருந்து 17 குழந்தைகளை கடந்த சனி மாலை பொலிஸார் மீட்டுள்ளனர். ஒரு வயதிற்கும் 7 வயதிற்கும் இடைப்பட்ட இக்குழந்தைகள் அங்கே மர்மமான முறையில் வைக்கப்பட்டிருந்தனர்.

இக்குழந்தைகளின் தாய்மார்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுக்கொடுத்தபின் அவர்களிடமிருந்து உரிய பணம் வந்து சேரும் வரை இக்குழந்தைகள் பிணையாக வைக்கப்பட்டனவா அல்லது இக் குழந்தைகளை விற்பனை செய்யும் பண்ணையாக இது நடத்தப்பட்டதா என பொலிஸார் ஆராய்ந்து வருகின்றனர். (வி)

# சுகாதார சீர்கேடு உணவகம் சீல்வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகர்ப்பகுதிக்கு உட்பட்ட பலகடைகள் பகுதி சுகாதாரப் பரிசோதகர் தி. து. மகாதேவனால் திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாறான சோதனைகளின்போது அண்மையில் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள உணவகம் ஒன்று சீல் வைத்து மூடப்பட்டுள்ளது. மண்ணெண்ணை வியாபாரத்துடன் உணவக வியாபாரமும் கூட்டாக ஒரே இடத்தினுள் மேற்கொள்ளப்பட்டதனாலேயே இவ்வுணவகம் பூட்டப்பட்டதாகத் தெரியவருகிறது.

இது தொடர்பாக சுகாதார பரிசோதகர் திரு. து. மகாதேவன் தெரிவிக்கையில்: "எனது பகுதிக்கு உட்பட்ட இடங்களில் 82 உணவகங்கள் இருக்கின்றன அவற்றை மூடிவிடுவது எமது நோக்கமல்ல. சுகாதாரச் சீர்கேடுகளுள்ள உணவகங்கள் இயங்குவதிலும் பார்க்க அவை இயங்காமல் இருப்பது மேல்'' என்றார்.

"இன்றைய சூழலில் நோய்கள் ஏற்படுவதற்கு முன்னர் அவற்றை வராமல் தடுப்பது தான் சிறந்தது. நெருப்புக் காய்ச்சல், வயிற்றோட்டம் போன்ற நோய்கள் அதிகரித்து வருகின்றன. இவற்றைத் தடுப்பதற்கு உணவகங்கள் தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும். உணவகங்களில் வேலை செய்வோர் தனிநபர் சுகாதாரத்தைப் பேணுவதுடன் சமையலறைச் சுத்தத்தைப் பேணுதலும் அவசியமாகின்றது. உணவகங்களில் மேற்கொள்ளும் திடீர் சோதனைகளின்போது அங்கு பயன்படுத்தப்படும் தண்ணீரின் தன்மை நன்கு சோதிக்கப்படுகிறது. பயன்படுத்தும் தண்ணீரை எடுத்துச்சென்று பல்கலைக்கழகத்தில் சோதனை செய்கிறோம் இது பொதுமக்களது பிரச்னை அவர்களும் இது சம்பந்தமான விடயங்களில் எமக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும்'' எனவும் தெரிவித்தார். (158-வி)

# உழைப்பாளரை இழந்த பெண்கள் பல்வேறு பிரச்னைகளுக்கு முகம் கொடுக்கின்றனர்

(யாழ்ப்பாணம்)

தமிழ்ப் பிரதேசங்களில் உழைப்பாளரை இழந்த பெண்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். இராணுவ, சமூக, குடும்ப காரணிகளால் விதவைகள் பல்வேறு தாக்கங்களுக்குள்ளாகிவருகின்றனர்.

இதுவரை வழங்கிய திட்டங்களால் ஏதாவது பயன் ஏற்பட்டுள்ளதா என்பதை ஆராய வேண்டும். கணவனை இழந்தவர்களுக்கு ஏதோ எம்மாலியன்ற உதவியைச் செய்தோம் என்ற மனப்பான்மை மாறவேண்டும். இவ்வாறு உழைப்பாளரை இழந்த பெண்களின் பிரச்னைகள் பற்றிய ஆய்வுப்பட்டறையில் உரையாற்றிய அறவழி போராட்டக்குழு நிர்வாக இயக்குனர் க. ஜீவகதாஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தனது உரையில்: கிராம மட்டத்தில் கல்வியறிவற்ற விதவைகளின் வாழ்க்கையில் கூடுதலான பிரச்சினைகள் பாதிப்புகள் உண்டு இவர்கள் மற்றவர்கள் தம்மைப் பார்த்து அனுதாபப்பட வேண்டும் என்ற கண்ணோட்டத்துடன் பார்க்கின்றனர் இந்நிலைமை மாறவேண்டும்.

உழைப்பாளரை இழந்த பெண்களின் தொழிற்திறனை ஆராய்ந்து அவர்களின் தொழிற்திறமைக்கேற்ப உதவிகளை வழங்கவேண்டும். பாதிப்புக்கான காரணம் ஆராயப்படவேண்டும் விதவைகளின் தொழில் திறமைக்கும் ஆற்றலுக்கும் வழிகாட்டப்படுதல்வேண்டும். தொழில் உதவி தொழிலுக்கான முதலீடு பொருளாகவே வழங்கப்படவேண்டும். தொழிற்திடம் வெற்றியளிக்கும் வரை கண்காணிப்பு அவசியம்.

வழங்கப்பட்ட கடன் பகுப்படியாக மீளப்பெறப்பட்டு அவரது பெயரில் வைப்பிலிடப்படவேண்டும். மனஆற்றுப்படுத்தல்சேவை அளிக்கப்படவேண்டும். பகுதி நேர முழு நேர குழந்தை பராமரிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்படவேண்டும். குடும்ப பராமரிப்பு உதவி வழங்கப்படவேண்டும்.

மறுமணப் பிரச்சினை பற்றி எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நடைமுறைச் சாத்தியமான திட்டம் வகுக்கப்படவேண்டும். தற்பொழுது ஒருசில மறுமணங்கள் ஆங்காங்கே நடைபெற்று வந்தாலும் இவை மேலும் மேலும் ஊக்குவிக்கப்படவேண்டும் எனவும் அவர் மேலும் கூறினார். (159-வி)

# வித்தியானந்தன் நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் நினைவுப் பேருரை வரிசையில் முதலாவது உரை நாளை புதன்கிழமை பி. ப. 3-30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். இப்பேருரையை யாழ். பல்கலைக்கழக கல்வி, வெளியீட்டுக் கிளைச் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் திரு. இ. முருகையன் நிகழ்த்தவுள்ளார். "தமிழில் வழங்கும் எழுத்துப் பெயர்ப்பு முறைகள்'' என்ற பொருளில் இவ்வுரை அமையும்.

# கப்பல் மீட்பு

(கொழும்பு)

நான்கு மாதங்களுக்கு முன்னர் கொழும்புத்துறைமுகத்தில் மூழ்கிய கப்பல் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

எத்தியோப்பியாவுக்கு எடுத்துச் செல்வதற்காக 600 மெற்றிக்தொன் நப்பலை ஏற்றியிருந்த இந்தக் கப்பல் மத்திய கிழக்குக்குச் சொந்தமானது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (கி-சு)

### 8 மாதக் கர்ப்பிணி

## குண்டுத்தாக்கு அதிர்ச்சியில் குழந்தை பிரசவிப்பு!

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் கடந்த வாரம் இலங்கை விமானப் படையினரால் நடாத்தப்பட்ட கண்மூடித்தனமான குண்டுத் தாக்குதலின் எதிரொலி அதிர்ச்சியில் 8 மாதக் கர்ப்பிணி ஒருவர் குழந்தை ஒன்றைப் பிரசவித்ததாக வெரித்தாஸ் வானொலி நேற்று அதன் செய்தியில் குறிப்பிட்டது.

மேற்படி தாக்குதலில் பாடசாலையும், தேவாலயமும் முற்றாக சேதமடைந்துள்ளதுடன் பொதுமக்கள் பலரும் படுகாயமடைந்ததாகவும், வெரித்தாஸ் மேலும் தெரிவித்தது. (வி-இ)

### வடக்கு-கிழக்கு அகதிகளுக்கு

## இத்தாலிய அரசு உணவுப் பொருள் உதவி

(கொழும்பு)

இராணுவ நடவடிக்கைகளினால் வடக்கு - கிழக்குப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கு ஒரு கோடியே 30 லட்சம் ரூபாய் பெறுமதியான உணவுப் பொருள்களை இத்தாலிய அரசு அன்பளிப்புச் செய்துள்ளது.

அரிசி உட்பட மற்றும் உணவுப் பொருள்கள் அடங்கிய இந்த அன்பளிப்பை இத்தாலிய நாட்டின் உயர் ஸ்தானிகர் உணவு கூட்டுறவு ஜனசக்தி அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சியிடம் நேற்று கொழும்பில் வைத்து கையளித்தார். (வி-இ)

### சந்தன மரக் கடத்தல்காரன்

## வீரப்பன் கண்ணியில் 6 பொலிஸார் பலி

(பெங்களூர்)

கர்நாடக மாநில - தமிழ்நாடு எல்லைக்கு அருகில் சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பன் குழுவினரால் வைக்கப்பட்ட கண்ணி வெடியில் சிக்கி நேற்று கர்நாடக சிறப்பு அலுவலர் படையைச் சேர்ந்த ஆறு பொலிஸார் உட்பட 14 பேர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். பொலிஸ் சுப்பிரின்டன் உட்பட நால்வர் படுகாயமடைந்தனர்.

நேற்று நடைபெற்ற இச்சம்பவத்துடன் வீரப்பன் குழுவினரால் 53 பேர் இதுவரை கொல்லப்பட்டுள்ளனர்.

கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த பாலார் ஆற்றுக்கருகே ரங்கப்பட்டு என்ற காட்டுப் பகுதியில், ஒரு பொலிஸ் அதிகாரி தலைமையில் பொலிஸார் ஜீப்பில் சென்றுகொண்டிருந்த வேளை ஜீப் கண்ணி வெடியில் சிக்கியதால், ஜீப் தூளானதுடன், ஆறு பேரும் ஸ்தலத்திலேயே பலியாகினர். பின் இரு தரப்பிலும் இடம் பெற்ற துப்பாக்கிச்சமரில் வீரப்பன் கும்பல் தரப்பில் 8 பேர் கொல்லப்பட்டனர். (கே-இ)

### வார இறுதியில் நடைபெறும் பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

வார இறுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள பரீட்சைகளின் விபரம் வருமாறு:

அரசாங்க உள்ளூராட்சி மற்றும் கூட்டுத்தாபனங்களில் சிற்றூழியர் தரம் 111, 111 அ பிரிவுகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை 1992 எதிர்வரும் 29-ம் திகதியும், பட்டப்பின் கல்வி டிப்ளோமா எழுத்துப் பரீட்சை -1993, எதிர்வரும் 29 - ம், 30 - ம் திகதிகளிலும், பயிலுனர் ஆசிரியர்களுக்கான தொலைக்கல்வி பரீட்சை பகுதி 1, 28, 29ஆந் திகதிகளிலும் நடைபெறும்.

சிற்றூழியர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன.

பட்டப்பின் கல்வி டிப்ளோமா, பயிலுனர் ஆசிரியர்களுக்கான தொலைக் கல்விப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை பிரேஷ்ட போதனாசிரியர்கள் கல்வித் திணைக்களத்திலிருந்து சேகரித்து பரீட்சார்த்திகளுக்குக் கையளிப்பார்கள் என யாழ் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் அறிவித்தார். (159-இ)

### அரசியல் கொலைகளுக்கு

# பிரேமாவே பொறுப்பு என இலங்கை மக்கள் கணிப்பு

(லண்டன்)

கடந்த பல வருடங்களாக இடம்பெற்று வந்த அரசியல்வாதிகள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளின் கொலைக்கு முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவே பொறுப்பு என இலங்கை மக்கள் குற்றம் சாட்டி வந்துள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

அரசின் இந்தக் கொலைகள் விடுதலைப்புலிகள் மேல் சுமத்தப்பட்டாலும் அநேக இலங்கையர்கள் அதை ஏற்றுக் கொள்ளவேயில்லை.

கடந்த வருடம் அராலித்துறையில் இடம் பெற்ற குண்டு வெடிப்பு தொடர்பாக விசாரிப்பதற்கு சர்வதேச விசாரணைக்குழு ஒன்று இலங்கை வந்துள்ளபோதும், இலங்கை மக்களின் மனங்களில் பதிந்துள்ள இந்த எண்ணத்தை மாற்றுவது இயலாத ஒருகாரியமாகும்.

இக்குழு அதன் விசாரணைகளில் பெரிதாக ஒன்றையும் சாதிக்கப் போவதில்லை. புதிதாக விசாரணைகளை அது ஆரம்பிக்கப்போவதுமில்லை. பழைய விசாரணைகளையே ஆராயப்போகிறது. தேவைப்படும் பட்சத்தில் பொது மக்கள் சாட்சியங்களை மாத்திரம் பதிவு செய்து கொள்ளும். எனவே இந்த விசாரணைக் கமிஷனிலிருந்து பெரிதாக எதனையும் எதிர்பார்க்க முடியாது எனவும் பி. பி. ஸி. தெரிவித்தது. (இ)

### 75 நோயாளர் கொழும்பு சென்றனர்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்ட 75 நோயாளர்கள், குமண கப்பல் மூலம் நேற்றுப் பிற்பகல் கொழும்பு புறப்பட்டுச் சென்றனர். (56-இ)

### 97 நோயாளர் சிகிச்சை பெற்று வந்தனர்

(நெல்லியடி)

திருமலையிலிருந்து புறப்பட்ட குமண கப்பல் நேற்றுக் காலை பருத்தித்துறை வந்து சேர்ந்தது.

இக் கப்பலில் கொழும்பில் சிகிச்சை பெற்ற 97 நோயாளர்கள் வந்து சேர்ந்தனர். [160-இ]

#### சங்குப்பிட்டி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உடன்பாடு காணப்படவேண்டுமென இவ்வாலோசனையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மையில் ஜனாதிபதியை சந்தித்த போதே யு. என். சி. ஆர். அதிகாரிகள் இவ் ஆலோசனையைத் தெரிவித்தனராம். (கி-இ)

#### கிளாலி கடற்பரப்பில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டனர். இதனைத் தொடர்ந்து விடுதலைப்புலிகள் கடுமையான எதிர்த்தாக்குதலை மேற்கொண்டனர். துப்பாக்கி வேட்டுக்களும் சரமாரியாக மேற்கொள்ளப்பட்டன. சேத விபரங்கள் இதுவரை தெரியவில்லை. (170-இ)

#### மூதூர் படகு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆணையாளரும் ஓய்வு பெற்ற மேல்நீதிமன்ற நீதிபதியுமான ஜி. எல். எம். ஏ. டி. சில்வா அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளித்தார்.

இவ்விபத்தில் இராணுவ உத்தியோகத்தர்கள் உட்பட பல தமிழர்கள் பலியானது தெரிந்ததே. (க-இ)

#### தமிழர் பிரச்னை தீர

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். தலைமை அலுவலகத் திறப்பு வருகை தந்த பிரதிநிதிகள் அங்கத்தவர்கள் தொண்டர்கள் மத்தியில் உரையாற்றிய இலங்கை செஞ்சிலுவைச்சங்க தலைவர் டீ. டீ. அபயசிங்க கூறினார்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைவர் த. சிவராசா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் இன்று நான் யாழ்ப்பாணம் வரும் வழியில் பாடசாலை மாணவர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் பல்லாயிரக்கணக்கானோர் சைக்கிளில் பிரயாணம் மேற்கொள்வதை அவதானித்தேன்.

சைக்கிள் பாவனையும் உதிரிப் பாகங்களும்

சைக்கிள் உதிரிப்பாகங்கள் ரயர், ரியூப் தட்டுப்பாடு இங்கு நிலவுவதாகவும் கூடிய விலை கொடுத்து சைக்கிள் உதிரிப்பாகங்களை வாங்க வேண்டிய நிலையில் பொது மக்கள் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

யாழ் கிளை சைக்கிள் உதிரிப்பாகங்கள் ரயர், ரியூப் ஆகியவற்றை கொள்முதல் செய்து இங்கு விற்பனை செய்வதற்கான திட்டம் ஒன்று தயாரித்து எம்மிடம் கையளித்தால் கொழும்பு தலைமை அலுவலகம் குறைந்த விலைக்கு சைக்கிள் உதிரிப்பாகங்களை கொள்முதல் செய்து யாழ். கிளைக்கு அனுப்பிவைக்க ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்ளும். இங்கு சைக்கிள் உதிரிப்பாகங்களை உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலை அமைக்க செஞ்சிலுவை சங்க யாழ். கிளை நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கான உதவிகளையும் வழங்குவேன் என்றார்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க தலைமை செயலக செயற்பாட்டு இயக்குநர் திரு. சீ. தயாளதேவாவும் இந்த வைபவத்தில் உரையாற்றினார். கூட்டம் ஆரம்பமாகு முன் அண்மையில் புக்காரா விமான குண்டு வீச்சில் கொல்லப்பட்ட யாழ். கிளை உப தலைவர் திரு. க. புவனேந்திரனின் உருவப் படத்தை இ. செ. சங்கத் தலைவர் திரு டீ. டீ. அபயசிங்க திரைநீக்கம் செய்து வைத்தார். (163-75-159 இ)

### அரச நிறுவனங்களின்

## முறைகேடுகளை விசாரிக்க உத்தரவு

(கொழும்பு)

அரச நிறுவனங்களின் முறைகேடுகள் குறித்து விசாரணை நடாத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

அரசநிறுவனங்களில் கடந்த காலங்களில் நிகழ்ந்ததாக கூறப்படும் வீண்விரயம், துஷ்பிரயோகங்கள், மோசடிகள் குறித்து அரசு விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது.

ஜனாதிபதி பிரேமதாஸாவின் ஆட்சிக்காலத்தில் இடம் பெற்ற மேற்பட்ட நடவடிக்கைகள் குறித்தே இவ்விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (கி-இ)

### நினைவு விழா

(கொழும்புத்துறை)

தம்பகிட்டி புலோலி மேற்கு சதாவதானி நா. கதிரவேற்பிள்ளையின் 86-வது ஆண்டு நினைவுவிழா அண்மையில் சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூகநிலைய முன்றலில் நிலையத் தலைவர் க. துரைலிங்கம் தலைமையில் கொண்டாடப்பட்டது. (154)

## நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு

(கொழும்பு)

தெற்கு, வடமேல் மாகாண சபைகளுக்கு ஆளும் ஐக்கிய தேசியக்கட்சியின் அங்கத்தவர்கள் முதலமைச்சர்களாக நியமிக்கப்பட்டதைக் கண்டித்து எதிர்க்கட்சிகள் நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்களை நடாத்தவுள்ளன.

மேற்படி மாகாணங்களில் எதிர்க்கட்சிதான் கூட்டாக இணைந்து ஆட்சி அமைப்பதற்கு தகுதி பெற்றிருந்தும் அரசு அதை அலட்சியப்படுத்தி தனது கட்சியை அங்கு பதவியில் அமர்த்தியிருப்பது ஜனநாயகத்துக்கு புறம்பான செயலெனவும் எதிர்க்கட்சிகள் கண்டித்துள்ளன. (இ)

#### அராலித்துறை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்காக பத்திரிகைகள் மூலம் தகவல்கள் கோரப்படவுள்ளதாகவும் இவ்விசாரணைகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விசாரணையை மேற்கொள்ள, மூன்று உறுப்பினர்கள் கொண்ட விசாரணைக்குழு ஏற்கனவே கொழும்பு வந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (கி-இ)

#### ஜனாதிபதியுடன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குழு உறுப்பினர்கள் நேற்று ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவை அவரது செயலகத்தில் சந்தித்தனர்.

இச்சந்திப்பின்போது ஜனாதிபதியின் செயலாளர் கே. எச். ஜே. விஜேதாச, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பேர்னார்ட் திலகரத்ன, ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் ஆகியோரும் சமுகம் தந்திருந்தனர். (க-இ)

#### எதிர்க்கட்சிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த வாரம் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் மேற்படி இரு மாகாணங்களிலும் எதிர்க்கட்சிகள் கூட்டாக வெற்றி பெற்றிருந்த போதிலும் ஐ. தே. க உறுப்பினர்களை சம்பந்தப்பட்ட ஆளுநர்கள் முதலமைச்சர்களாக நியமித்தது, அரசியல் சட்டத்துக்கு முரணானது என்று இந்த இரு கட்சிகளும் தமது மனுவில் குற்றம் சாட்டியுள்ளன. (வி-இ)

#### தமிழ்நாட்டின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாகத் தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா, முன்னாள் தமிழக ஆளுநர் திரு. பீஷ்மன் நாராயண்சிங்குடன் பேச்சுக்கள் நடத்தியதாக அ. தி. மு. க. வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழ்நாடு சட்ட மன்றத்துக்கு இன்னும் மூன்று ஆண்டுகள் ஆயுள் காலம் இருக்கின்றது. முதலமைச்சர் தமிழ்நாடு அரசைக் கலைக்கும்படி பரிந்துரை கூறக்கூடும் என்று எதிர்பார்த்த தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கட்சி, "எதிர்க்கட்சிகளுடன் ஆலோசனை நடத்தாமல் செல்வி ஜெயலலிதாவின் கூற்றுப்படி தமிழ்நாடு அரசைக் கலைக்க வேண்டாம்" என்று புதிய ஆளுநர் சென்னாரெட்டியிடம் நேற்று மனு ஒன்றைக் கொடுத்துள்ளது.

தமிழ்நாடு அரசைக் கலைப்பதை சட்ட மன்றத்தில் இருக்கும் 160 அ. தி. மு. க. உறுப்பினர்கள் அரைவாசிப் பேர் விரும்பவில்லை.

அவர்கள் தனிக்குழுவாகப் பிரிந்து இந்திரா காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து கூட்டு ஆட்சியை அமைக்க விருப்பம் தெரிவித்துள்ளார்கள் என்றும் பி. பி. ஸி. தெரிவித்தது. (வி-சி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, ... இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு மே மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Srilanka under licence Number B/10986/B